# பெப்ரவரி – 27 – புதன்

## தூய வியாகுல அன்னையின் கபிரியேல்

**“ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்” ( மாற் 9:35)**

**முதல் வாசகம் : சீராக் 4 : 11 - 19**

ஞானம் தன்மக்களை மேன்மைப்படுத்தும் தன்னைத் தேடுவோர்க்குத் துணைநிற்கும். ஞானத்திற்கு அன்பர் வாழ்விற்கும் அன்பர் அதனை வைகறையிலேயே தேடுவோர் மகிழ்ச்சியால் நிரம்புவர். அதனைப் பற்றிக்கொள்வோர் மாட்சியை உரிமையாக்கிக் கொள்வர் அது செல்லும் இடமெல்லாம் ஆண்டவர் ஆசி வழங்குவார். அதற்குப் பணி செய்வோர் தூய இறைவனுக்கே ஊழியம் புரிகின்றனர் ஞானத்துக்கு அன்பர் ஆண்டவருக்கும் அன்பர். ஞானத்துக்குப் பணிவோர் மக்களினங் களுக்குத் தீர்ப்பு வழங்குவர் அதற்குச் செவிசாய்ப்போர் பாதுகாப்பாய் வாழ்வர். ஞானத்தை நம்புவோர் அதனை உரிமையாக்கிக் கொள்வர் அவர்களுடைய வழி மரபினரும் அதனை உடைமையாக்கிக் கொள்வர். முதலில் அவர்களை அது கோணல் வழியில் அழைத்துச் செல்லும் அவர்களுக்கு அச்ச நடுக்கத்தை வருவிக்கும் தனக்கு அவர்கள்மீது நம்பிக்கை ஏற்படும்வரை அவர்களை அது கண்டிக்கும், வதைக்கும் தன் நெறிமுறைகளால் அவர்களைச் சோதிக்கும். அது மீண்டும் அவர்களிடமேவந்து அவர்களை மகிழ்விக்கும் அவர்களுக்குத் தன் இரகசியங்களை வெளிப்படுத்தும். அதைவிட்டு அவர்கள் விலகிச்சென்றால், அவர்களை அது கைவிட்டுவிடும் அழிவுக்கு அவர்களை இட்டுச் செல்லும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்.

**நற்செய்தி : மாற்கு 9 : 38 - 40**

அக்காலத்தில் யோவான் இயேசுவிடம், ”போதகரே , ஒருவர் உமது பெயரால் பேய்கள் ஓட்டுவதைக் கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில் அவர் நம்மைச் சாராதவர்”என்றார். அதற்கு இயேசு கூறியது : ”தடுக்க வேண்டாம். ஏனெனில் என்பெயரால் வல்லசெயல் புரிபவர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேச மாட்டார். ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்.

**தியானம் :** இன்று உலகில் தலைமைப் பதவிக்கு ஆசைப்படுவோர் ஏராளம். எல்லா நாடுகளிலும் இது உண்டு, அதனால் தம்மை எதிர்ப்பவர்களை அழிக்க நினைக்கின்றார்கள். அன்று யேசுவிற்கும் இதுதான் நிகழ்ந்தது. அவர் உண்மை பேசினார். நீதியின் பக்கம் நின்றார். அதனால் அவர் அழிக்கப் பட்டார். ஆனால் யேசு அழிவில் நின்று மீண்டு எழுந்தார். அழிவு பலவகைப்படுகின்றது. இயற்கையின் சீற்றத்தால், கடலின் சீற்றத்தால் இன்று பல உயிர்கள் அழிக்கப்படுன்றன. சுய நலத்தினால், சர்வாத்திகாரத்தினால், பதவி ஆசையினால், மதக் கோட்பாடுகளினால் பலர் கொல்லப்படுன்றனர். சீடர்கூட யேசுவின் மரணத்தின் பின் யார் பெரியவர் என்றுதான் முதலில் சிந்தித்தார்கள். அவர் மறைந்த பின் எல்லோரும் பயத்தினால் சிதறிப் போனார்கள். நான்தான் தலைவன் என்று சொல்லி எல்லோரையும் ஒரே அணியில் சேர்க்க யாராலும் முடியவில்லை. அதற்கு ஆவியானவரின் பிரசன்னம் தேவைப்பட்டது. தலைமைப்பதவிக்கு வர ஆசைப்படுபவர் தொண்டனாக இருக்க வேண்டும் என்று நற்செய்தியில் யேசு மிகத்தெளிவாக குறிப்பிடுகின்றார். தமது குடும்பத்தை முன்னேற்ற, வங்கியில் பண வைப்பை அதிகரிக்கத்தான் இன்று அரசியல் தலைவர்கள் முற்படுகின்றார்களே ஒழிய, மக்கள் நலனை, முன்னேற்றத்தை யார் நினைக்கின்றார்கள்? அப்படி நினைப்பவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. யாருக்கும் தெரியாமல் மறைவாக உதவும் பொது நலன் கொண்ட பல நல்ல உள்ளங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவர்கள் தம்மை மறைத்துக் கொள்கின்றார்கள். வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் இருக்கட்டும் என்ற யேசுவின் வார்த்தையை பலர் விரும்புகின்றார்கள். அவ்வாறு நாமும் எம்மால் முடிந்த சிறிய உதவிகளையாவது தேவையில் உள்ளவர்களுக்கு செய்ய முற்படுவோம். அப்போது கடவுளின் பார்வையில் நாமும் உயர்த்தப்படுவோம். சாலமோன் அரசன் கடவுளிடம் மக்களை வழிநடத்த ஞானத்தை கேட்டு பெற்றதுபோல் எம்மை வழிநடத்த இறிவனிடம் ஞானத்தை கேட்போம்.